OS.01/2014 Dated: 13.06.2025

Dw1 தன்ராஜ்

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் என் தகப்பனார் காலம் முதல் கோவில் நிலத்தில் குடியிருந்து வருவதாக கூறியுள்ள நிலையில் கோயில் நிர்வாகத்திடம் எனது வாடகையை அனுமதிக்க கோரி மனு கொடுத்துள்ளேன் என்றால் மனு கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுத்த மனுவை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு நான் கொடுத்த மனுவிற்கு திருக்கோவில் நிர்வாகம் ஏதேனும் பதில் அளித்தார்களா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் முடிந்த பிறகு முடிவு எடுப்பதாக சொன்னார்கள். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது வாடகை உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட கோரிக்கை வைத்துள்ளேன் என்றும் அவ்வாறு நான் கூற வேண்டுமென்றால் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும் நான் வழக்கு சொத்தில் இருந்து காலி செய்து சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(ஆறு மற்றும் ஏழு பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)